இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 20.10.2026

# போதை நாடாக்கும் த.வெ.க.!

**வி**லைவாசி உயர்வில் தமிழ்நாட்டை முதல் மாநிலமாக ஆக்கினார் முதலமைச்சர் விஜய். பணவீக்கத்தில் தமிழ்நாட்டை முதல் மாநிலமாக ஆக்கினார் முதலமைச்சர் விஜய். இந்த வரிசையில் போதை மருந்து நடமாட்டத்திலும் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக ஆக்கி வருகிறார் விஜய்.

**அதுவும் போதை மருந்துகளை த.வெ.க. நிர்வாகிகளே துணிச்சலாகக் கடத்தி வருகிறார்கள். விற்கிறார்கள். அவர்களுக்கு என்ன துணிச்சல்? போதை மருந்தை வெளிப்படையாக பயன்படுத்தி, அதனை வீடியோவும் எடுத்து வைத்திருந்த 'கில்லி' சரத்குமார் என்பவர் அமைச்சராக இருக்கும் போது நாம் போதை மருந்து கடத்தினால் என்ன தவறு என்று த.வெ.க. நிர்வாகி நினைக்கிறார். பொதுவெளியில் போதை பவுடர் பயன்படுத்திய சரத்குமாரை இன்னமும் அமைச்சராக வைத்துள்ளார் விஜய். அதுதான் போதை மருந்து கடத்தல் துணிச்சலாக நடப்பதற்குக் காரணம்.**

135 கிலோ மெத்தபெட்டமைன் போதைப் பொருளை நாகப்பட்டினத்தைச் சேர்ந்த த.வெ.க. நிர்வாகி பூபாலன் வைத்து இருந்ததாக மத்திய வருவாய் புலனாய்வு பிரிவு கைப்பற்றி இருக்கிறது. இதன் மொத்த மதிப்பு ரூ.300 கோடியாக இருக்கலாம். போதை மருந்து தடுப்புக்காக தனிப்பிரிவு தொடங்கி இருப்பதாக பீற்றிக் கொண்டார் விஜய். அந்தப் பிரிவு என்ன செய்து கொண்டு இருக்கிறது? த.வெ.க. நிர்வாகிதானே விற்கிறார், விற்கட்டும் என்று விட்டு விட்டதா?

135 கிலோ மெத்தபெட்டமைன் போதைப் பொருளை நாகப்பட்டினத்தில் இருந்து இலங்கைக்கு கடத்த வைத்திருந்தார் த.வெ.க. நிர்வாகி பூபாலன். இந்திய - இலங்கை கடல் எல்லையில் சட்டவிரோதமான கடத்தல் சம்பவத்தில் தொடர்புள்ளவராக இருந்துள்ளார் இந்த த.வெ.க. நிர்வாகி. ரூ.300 கோடி மதிப்பிலான போதைப் பொருள் தமிழ்நாட்டில் இருந்து இலங்கைக்கு கடத்தப்பட இருப்பதாக ஒன்றிய அரசின் வருவாய் புலனாய்வு பிரிவுக்கு தகவல் வந்து, அவர்கள் நாகை த.வெ.க. நிர்வாகி பூபாலன் வீட்டில் வந்து குவிந்தார்கள். அவர் சுற்றி வளைக்கப்பட்டுள்ளார். த.வெ.க. நிர்வாகி பூபாலன் உள்பட நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

சாதாரணமாக பயன்பாட்டுக்கு போதைப் பொருள் வைத்திருப்பது குற்றம். மிகச்சிறு அளவில் அடுத்தவருக்கு கொடுப்பதும் குற்றம். சிறு அளவில் விற்பனை செய்வதும் குற்றம். இவை அனைத்தையும் விட, மிகப்பெரிய அளவில் கடத்தல் செய்வது, கடத்தி வருவது மாபெரும் குற்றம் ஆகும். அதனைத்தான் செய்துள்ளார் விஜய் கட்சி நிர்வாகி.

**சர்வதேச போதை மருந்து கடத்தல் கும்பலோடு த.வெ.க. நிர்வாகி தொடர்பு வைத்திருந்தார் என்பது ஒரு பக்கம் என்றால், சர்வதேச போதை மருந்து கடத்தல் கும்பல் துணிச்சலாக தமிழ்நாட்டைத் தேர்ந்தெடுக்கும் அளவுக்கு வந்துள்ளது என்பதைத்தான் இதில் கவனிக்க வேண்டும். த.வெ.க. ஆட்சியை தனக்கான களமாக சர்வதேச கும்பல் நினைக்கிறது.**

கொலை - கொள்ளை - வழிப்பறி - பாலியல் வன்கொடுமைகள் - அரிவாள் வெட்டுகள் - போதை மருந்து நடமாட்டம் - போதை விற்பனை - - திருட்டு லாட்டரி விற்பனை - ஆகிய அனைத்து குற்றச்சம்பவங்களும் நாளுக்கு நாள் தமிழ்நாட்டில் அதிகமாகி வருகின்றன. சட்டம் ஒழுங்கு கெட்டது என்பதை விட சமூக விரோதிகளின் வேட்டைக்காடாக தமிழ்நாடு மாறி வருவதுதான் இதுபோன்ற சர்வதேச போதை மருந்து கும்பலுக்கு துணிச்சலைக் கொடுக்கிறது.

இதற்கான ஒப்புதல் வாக்குமூலத்தை தமிழ்நாடு டி.ஜி.பி. மகேஷ்குமார் அகர்வால் சமீபத்தில் அளித்த பேட்டியில் கொடுத்துள்ளார்.

தமிழகத்தில் போதைப் பொருள் தொடர்பாக 12 ஆயிரத்து 595 வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக டி.ஜி.பி. சொல்கிறார். போதை நடமாட்டத்துக்கு இதுவே ஒப்புதல் வாக்குமூலம் அல்லவா?

போதை மருந்து விற்பனை செய்ததாக 18 ஆயிரம் பேரைக் கைது செய்துள்ளதாக அவர் சொல்கிறார். இதுவும் ஒப்புதல் வாக்குமூலம்தானே?

23 ஆயிரம் கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதாக அவர் சொல்கிறார். இதுவும் ஒப்புதல் வாக்குமூலம்தானே?

10 லட்சத்திற்கும் மேற்பட்ட போதை மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக அவர் சொல்வதும் ஒப்புதல் வாக்குமூலம்தானே?

**'இன்றைய காலகட்டத்தில் போதை பொருள் என்பதை நமக்கு ஒரு மிகப்பெரிய சவாலாக உள்ளது'** என்று அவர் சொல்லி இருப்பதும் ஒப்புதல் வாக்குமூலம்தானே?

**'கர்நாடகா மாநிலம் நார்த் ஈஸ்ட் மாநிலங்களிலிருந்து அதிகளவில் தமிழகத்திற்குள் நுழைகிறது'** என்று அவர் சொல்லி இருப்பதும் ஒப்புதல் வாக்குமூலம்தானே?

**'கடந்த மூன்று ஆண்டுகளை ஒப்பிடும் பொழுது தற்பொழுது 12 மடங்கு அதிக அளவில் போதைப்பொருள் மாத்திரையை காவல்துறையால் பறிமுதல் செய்துள்ளோம்.'** என்று டி.ஜி.பி. சொல்வது ஒப்புதல் வாக்குமூலம் தானே?

**போதைப் பொருள் நடமாட்டம் அதிகம் ஆகி இருக்கிறது என்பதை டி.ஜி.பி.யே ஒப்புக் கொண்டுள்ளார். அதை த.வெ.க. நிர்வாகிகள் கடத்தி வருகிறார்கள், கடத்திச் செல்கிறார்கள், சர்வதேச போதைக் கும்பல் தமிழ்நாட்டை தங்களது மாநிலமாக்க முயற்சித்து வருகிறது என்பதை நாகை த.வெ.க. நிர்வாகி பூபாலன் கைது மூலமாகத் தெரிய வருகிறது.**

**தூய சக்தி ஆட்சி, குற்றவாளிகளுக்கு மட்டுமே மகிழ்ச்சியைத் தந்து வருகிறது.**

---

### மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் – தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழக ஒருங்கிணைந்த தலைவராகத் தேர்வான

# பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லாவிற்கு வாழ்த்து!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் பதிவு!

சென்னை, அக்.20 - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள் வாழ்த்தி எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் மற்றும் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக்கழக ஒருங்கிணைந்த தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு வாழ்த்து தெரிவித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தள பதிவு வருமாறு:-

மனிதநேய மக்கள் கட்சி மற்றும் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் ஒருங்கிணைந்த தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பேராசிரியர்



எம்.எச்.ஜவாஹிருல்லா அவர்களுக்கும், மனிதநேய மக்கள் கட்சியின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அப்துல் சமது உள்ளிட்ட நிர்வாகிகள் அனைவருக்கும் எனது உளமார்ந்த வாழ்த்துகள்!

உரிமைகள் மறுக்கப்படும் இடங்களிலும் - அநீதிக்கு எதிரான போராட்டங்களிலும் உறுதியான குரலாகவும், மதநல்லிணக்கத்தைப் பேணுவதில் இணைப்புப் பாலமாகவும் திகழ்ந்துவரும் இரு அமைப்புகளின் மக்கள் பணி, தங்கள் அனைவரின் தலைமையிலும் வழிகாட்டுதலிலும் மேலும் வலுப்பெற்று, சமூகநீதியும் சமத்துவமும் தழைக்கும் சமுதாயத்தை உருவாக்கத் துணை நிற்கட்டும்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

---

### ரூ.1000 கோடி உயர் ரக போதைப் பொருள் பறிமுதல்!

# த.வெ.க. நிர்வாகி சர்வதேச கடத்தல் கும்பலுடன் தொடர்பு!

## "தூயசக்தி" விஜய் ஆட்சியில் போதைப் பொருள் கடத்தல் மையமாக மாறும் தமிழ்நாடு!

நாகை, அக். 20 - நாகை அருகே 135 கிலோ போதை பொருள் பறிமுதல் செய்யப்பட்ட வழக்கில், கைதான த.வெ.க. நிர்வாகிக்கு சர்வதேச போதை பொருள் கும்பலுடன் தொடர்பு இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. இதனடிப்படையில் த.வெ.க. நிர்வாகி உள்பட 4 பேரிடமும் 24 மணி நேரம் கிடுக்கிப்பிடி விசாரணை நடந்தது. இந்த விவகாரத்தில் மேலும் பலர் சிக்குவார்கள் என்று கூறப்படுவதால் பரபரப்பு நிலவுகிறது.

நாகையில் இருந்து இலங்கைக்கு சர்வதேச போதைப் பொருளான மெத்தபெட்டமைன் கடத்துவதாக ராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து கடந்த சில தினங்களுக்கு முன்பு ஒன்றிய நிதி அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வரும் வருவாய் குற்றப் பிரிவு புலனாய்வு துறை திருச்சி மண்டல அதிகாரிகளுக்கு தகவல் வந்தது.

இதையடுத்து 16ம் தேதி அன்று காலை நாகை மாவட்டம் வேளாங்கண்ணி அருகே பிரதாபராமபுரம் நடுத்தெருவை சேர்ந்த பைனான்சியரான சுகன் (27) என்பவர் வீட்டிற்கு மத்திய வருவாய் புலனாய்வு இயக்குனரக இணை இயக்குனர் கனகசுப் பிரமணியன், நாகை சுங்கத்துறை கண்காணிப்பாளர்கள் சசிசேகர், ஆனந்த், தீபக் ஆகியோர் தலைமையிலான 20 பேர் கொண்ட அதிகாரிகள் 4 கார்களில் வந்தனர். சுகன் வேளாங்கண்ணியில் தங்கும் விடுதி ஒன்றை ஒப்பந்த முறையில் எடுத்து நடத்தி வருகிறார்.

அதிகாரிகள் அதிரடியாக சுகன் வீட்டுக்குள் நுழைந்து சோதனை மேற்கொண்டனர். இதில் சுகன் வீட்டில் இலங்கைக்கு கடத்த பதுக்கி வைத்திருந்த தலா 5 கிலோ எடையுடன் 27 பாக்கெட்டுகளில் ரூ.1000 கோடி மதிப்பிலான 135 கிலோ மெத்த பெட்டமைன் என்ற உயர் ரக போதைப் பொருளை கண்டு பிடித்தனர். காரை போதை பொருளுடன் பறிமுதல் செய்தனர். இந்த கடத்தலுக்கு மூளையாக நாகை மாவட்ட தவெக செயற்குழு உறுப்பினரும், வழக்கறிஞருமான வேளாங்கண்ணி அருகே உள்ள கீழப்பிடாக சந்தாமணி மெயின் ரோட்டைச் சேர்ந்த பூபாலன் (42) செயல்பட்டுள்ளார். இவரும், சுகனும் நெருங்கிய நண்பர்கள். இதையடுத்து பிரதாமராமபுரத்தில் இருந்து 8 பேர் கொண்ட அதிகாரிகள் பூபாலன் வீட்டிற்கு சென்று பல மணி நேரம் சோதனை நடத்தினர். விசாரணையில் பூபாலன் மனைவி இலங்கையை சேர்ந்தவர் என்பது தெரியவந்தது.

இதை பயன்படுத்தி சுகன் போன்றவர்கள் மூலம் நாகையில் இருந்து இலங்கைக்கு பல ஆண்டுகளாக போதைப்பொருட்களை அவர் கடத்துவது விசாரணையில் தெரியவந்தது. 2 வீடுகளிலும் விசாரணை மாலை 5 மணி வரை நீடித்தது.

பின்னர் பூபாலன், சுகன், வேளாங்கண்ணி காந்தி செட்டி தெருவை சேர்ந்த மணிகண்டன்(29), பிரதாபராமபுரம் யாதவர் தெருவைச் சேர்ந்த சுகனின் மற்றொரு நண்பர் சதீஷ்(30) ஆகிய 4 பேரை கைது செய்தனர். மேலும் பூபாலன், சுகனிடம் இருந்து 2 ஆடம்பர காரும் பறிமுதல் செய்யப்பட்டது.

முதலில் மாலை 6.30 மணிக்கு பூபாலனிடம் விசாரணை நடத்தினர். இதன் பின்னர் 8.30 மணிக்கு மற்ற 3 பேரையும் அழைத்து வந்தனர். அங்கு தொடர்ந்து தனித்தனியாக 4 பேரிடமும் கிடுக்கிப்பிடி விசாரணை நடத்தினர். விசாரணை விடிய விடிய நடத்தப்பட்ட நிலையில் நேற்று இரவு 8.30 வரை நீடித்தது.

பூபாலன் உள்பட 4 பேருக்கும் சர்வதேச போதை பொருள் கும்பலுடன் தொடர்பு இருக்கலாம். இலங்கையில் யாருக்கு போதை பொருள் அனுப்ப பதுக்கி வைத்தனர், இதுபோல் வேறு எங்கெல்லாம் போதை பொருளை அனுப்பி உள்ளனர், எத்தனை ஆண்டுகளாக இதில் ஈடுபட்டு வருகின்றனர் என்று விசாரணை நடந்து வருகிறது.

---

### கடந்த மூன்று மாதங்களாக

# அரிசி விலை தொடர்ந்து உயர்வு!

## "ஒருவேளை உணவை குறைக்க வேண்டிய நிலைமை உள்ளது" – பொதுமக்கள் கொந்தளிப்பு!

**சென்னை, அக். 20 - தமிழகத்தில் கடந்த மூன்று மாதங்களாக அரிசி விலை தொடர்ந்து உயர்ந்து வருவதால், ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அரிசியுடன் பருப்பு, சமையல் எண்ணெய் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் விலையும் அதிகரித்துள்ளதால், குடும்பங்களின் மாதாந்திரச் செலவுகள் உயர்ந்துள்ளன. விலையைக் கட்டுப்படுத்தவும், பதுக்கலைத் தடுக்கவும் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.**

**மூன்று மாதங்களில் மூட்டை விலை!**

**ரூ.800 வரை உயர்வு:**

தமிழகத்தில் 26 கிலோ கொண்ட சன்னரக அரிசி மூட்டை ஜூலை மாதத்தில் ரூ.1,600க்கு விற்பனை செய்யப்பட்டது. இது ஆகஸ்டில் ரூ.1,750ஆகவும், செப்டம்பரில் ரூ. 1,900ஆகவும் உயர்ந்து, அக்டோபரில் ரூ.2,200ஆக அதிகரித்துள்ளது. இதேபோல, 26 கிலோ கொண்ட மோட்டா ரக அரிசி மூட்டை விலை ஜூலையில் ரூ. 1,200ஆக இருந்தது. இது ஆகஸ்டில் ரூ. 1,400 ஆகவும், செப்டம்பரில் ரூ.1,600ஆகவும் உயர்ந்து, தற்போது ரூ.1,800க்கு விற்பனை செய்யப்படுகிறது.

இதன்படி, சன்னரக அரிசி மூட்டை விலை ரூ.800, மோட்டா ரக அரிசி மூட்டை விலை ரூ. 600 அதிகரித்துள்ளன.

நெல், அரிசி வியாபாரிகள் சங்கத் தலைவர் டி.கோபி கூறியதாவது: -

தமிழகத்தில் சுமார் 600 அரிசி ஆலைகள் உள்ளன. சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் மட்டும் சுமார் 200 ஆலைகள் செயல்படுகின்றன.

வழக்கமாக நாளொன்றுக்கு 100 லாரிகளில் வந்த நெல், தற்போது 50 லாரிகளில் மட்டுமே வருகிறது. சென்னையின் அரிசித் தேவையில் பெரும்பகுதி ஆந்திரம், கர்நாடக மாநிலங்களிலிருந்து பூர்த்தி செய்யப்படுகிறது. வரத்து குறைந்துள்ளதால் விலை உயர்ந்துள்ளது.

இந்த நிலை டிசம்பர் வரை நீடிக்கலாம். ஜனவரியில் புதிய நெல் வரத்து தொடங்கிய பின்னரே விலை குறைய வாய்ப்புள்ளது என்றார்.

**விற்பனை சரிவு; ரேஷன் அரிசியை நாடும் மக்கள்:**

மொத்த வியாபாரி ராஜேஷ் கூறுகையில், விலை உயர்வால் முன்பு 26 கிலோ அரிசி மூட்டை வாங்கியவர்கள் தற் போது 10 கிலோ மூட்டை களை வாங்குவதாகத் தெரிவித்தார். சில வியாபாரிகள் அரிசியைப் பதுக்கி வைப்பதாகப் புகார்கள் எழுந்துள்ளதால், அரசு கண்காணிப்பைத் தீவிரப்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

சில்லறை வியாபாரி ஒருவர் கூறுகையில், முன்பு 10 கிலோ அரிசி வாங்கிய வாடிக்கையாளர்கள் தற்போது 5 கிலோ மட்டுமே வாங்குகின்றனர். பருப்பு, எண்ணெய் உள்ளிட்ட பொருள்களின் விலையும் உயர்ந்துள்ளதால், பலர் ரேஷன் கடை அரிசியை நம்பியுள்ளனர் என்றார்.

**இல்லத்தரசி மஞ்சுளா கூறியதாவது:**

முன்பு மாதந்தோறும் ஒரு மூட்டை அரிசி வாங்கினோம். தற்போது கடைகளில் 10 கிலோவும், ரேஷன் கடைகளில் 15 கிலோவும் வாங்க வேண்டியுள்ளது. உணவுச் செலவைக் குறைக்க ஒருவேளை உணவைக்கூட குறைத்து, சிற்றுண்டியுடன் சமாளிக்க வேண்டியுள்ளது. அரிசியுடன் பிற அத்தியாவசியப் பொருள்களின் விலையையும் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

கூலித் தொழிலாளி சித்ரா கூறுகையில், விலைவாசி உயர்வால் வழக்கமாக வாங்கிய அரிசிக்குப் பதிலாக நொய் அரிசி வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கூலி வேலை செய்து குடும்பத்தை நடத்துவது சிரமமாகி வருகிறது. ரேஷன் கடைகளில் அத்தியாவசியப் பொருள்களை மலிவு விலையில் வழங்க வேண்டும் என்றார்.



ஈரோடு ஒன்றியக் கழகச் செயலாளர் தோப்பு டி.சதாசிவம் தந்தையும், மேட்டுநாசுவம்பாளையம் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவருமான தோப்பு எம்.துரைசாமி மறைவு செய்தியறிந்த ஈரோடு தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான சு.முத்துசாமி அவரது இல்லத்திற்கு நேரில் சென்று அன்னாரின் உடலுக்கு மலர்மாலை வைத்து, கழகக் கொடி போர்த்தி அஞ்சலி செலுத்திவிட்டு அவரது குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார். அதுபோது கழக கொள்கை பரப்பு இணைச் செயலாளர் வி.சி.சந்திரகுமார், மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் ஆ.செந்தில்குமார், மாவட்டக் கழகப் பொருளாளர் ப.க.பழனிச்சாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.எஸ்.குமாரசாமி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் அஞ்சலி செலுத்தினார்கள்.